# NEWSLETTER

No 55 , Kachcheri Nallur Road, Jaffna | +94 21 222 6608 -9 | info@cciy.lk | www.cciy.lk

## Past Events





For successful business, not only investment but also sector related knowledge, engagement and commitment, Mangalapathy Ayurveda ( PVT) LTD said.





Marketing opportunities for emerging entrepreneurs



Share market



Waste management

# Wednesday Market- 2022

Every Wednesday, the Faculty of Management Studies and Commerce provides opportunities to SMEs to market their products by initiating the event of **Wednesday market-2022**. CCIY, in accordance with Memorandum of Understanding signed by & between CCIY and FMSC, facilitates its SMEs for this market to motivate them





Luxmy food products earned 10 000 LKR by showcasing its products on 09.11.2022









The enterprise named Bavani Gram Store marketed its food products on 16.11.2022 and got 5000 LKR as an income




# Past events



Chamber of Commerce and Industries of Yarlpanam (CCIY) successfully Conducts monthly webinar to share knowledge to its member and Non-members. There was a very important webinar on tax procedures for business and industrial sectors which was held in October, 2022. Mohamad Mifly, Senior Commissioner and Mrs L.yasotha Assistant Commissioner , Inland Revenue Department participated as resource persons shared their knowledge on aforementioned topics. Whereas, in November 2022, Mr Kabilan Suntharamoorthy , Senior Lecturer, Planning, Department of Geography, University of Jaffna graphically spoke on how Good governance practices are vital to run an organization.



## கடந்தகாலத்தில் CCIY பங்குபற்றிய நிகழ்வுகள்
## Past events participated by CCIY





தேசிய வர்த்தக மற்றும் வருமானத்தை அதிகரிக்க வேண்டும் என்ற நோக்குடன் யுஸ்எய்ட் (USAID) நிறுவனத்தால் கார்த்திகை மாதம் 3ம் திகதி 2022 அன்று நோர்த்கேற் ஜெற்விங் ஹோட்டலில் ஏற்றுமதி தொடர்பான வழிப்படுத்தல் நிகழ்வு நடைபெற்றது. சுர்வதேச வர்த்தக நிலையத்தின (ITC) சிரேஸ்ட தேசிய ஆலோசகர் யாழ்ப்பாண பல்கலைக்கழக முகாமைத்துவ (FMSC) பீட பீடாதிபதி, யாழ்ப்பாணம் வர்த்தக கைத்தொழில் மன்றத்தின் (CCIY) உப தலைவர் பிரதம விருந்தினர்களாகவும் மற்றும் பங்குபற்றுனர்களாக CCIY யின் பணிப்பாளர்கள், ஊழியர்கள் மற்றும் அங்கத்தவர்கள், ஏனைய அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் மற்றும் வட மாகாண தொழில்முயற்சியாளர்கள் என கிட்டதட்ட 60 பேர் இதில் கலந்துகொண்டு பயன்பெற்றிருந்தனர்.

கலந்துரையாடப்பட்ட விடயங்களின் சாரம்சம்

1. நிதி முகாமைத்துவம்
2. சந்தை
3. நிறுவன அபிவிருத்தி
4. மனித வள முகாமைத்துவம்

10. 11. 2022 அன்று கிறின் கிராஸ் ஹோட்டலில் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்திக்கான மத்திய அமைச்சின் (BMZ) நிதியுதவியின் கீழ் சர்வதேச வர்த்தக நிலையம் (ITC) மற்றும் GIZ, வர்த்தக நிலையம் (DOC), இலங்கை ஏற்றுமதி அதிகார சபை (SLEDB) யாழ் பிராந்திய அலுவலகம் மற்றும் இலங்கை வர்த்தக சம்மேளனம் ஆகியன இணைந்து வர்த்தக நடைமுறைகள் தொடர்பான விழிப்புணர்வு செயலமர்வை நடத்தியது. வர்த்தக திணைக்களத்தின் பணிப்பாளர் மற்றும் பிராந்திய விவகாரங்கள் பிரிவின் பிரதானி, சர்வதேச வர்த்தக நிலையத்தின் சிரேஸ்ட தேசிய ஆலோசகர் மற்றும் ஊழியர்கள், இலங்கை வர்த்தக சம்மேள செயலாளர் நாயகம் மற்றும் உதவி செயலாளர் நாயகம் என்பவர்களும் ஏற்றுமதி அதிகார சபை, தேசிய தொழில் அபிவிருத்தி அதிகாரசபை, கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை போன்றவற்றின் பிரதிநிதிகளும் பல விடயங்களை பகிர்ந்திருந்தனர். யாழ்ப்பாணம் வர்த்தக கைத்தொழில் மன்றத்தின் (CCIY) உப தலைவர் மற்றும் ஊழியர்கள் மற்றும் தொழில்முயற்சியாளார்கள இதில் கலந்து கொண்டு பயன்பெற்றிருந்தனர்.




அமர்வின் நோக்கங்களாக :

1. வர்த்தக நடைமுறைகளுக்கான படிப்படியான வழிகாட்டி, அது எவ்வாறு செயல்படுகின்றது மற்றும் வர்த்தக பங்குதாரர்களக்கான அதன் நனமைகள் காட்சிப்படுத்தல்
2. வசதியளித்தல் மற்றும் மேம்படுத்தலுக்கான பகுதிகள் மற்றும் வாய்ப்புக்களை கருத்தில் கொள்ளுதல், குறிப்பாக தடைகள் மற்றும் இடையுறுகளை நீக்குதல்.
3. மூல அமைப்பின் இணையசான்றிதழை அறிமுகப்படுத்தல்
4. முக்கிய வர்த்தக ஆதரவு இவங்கை அரசாங்கத்தின் நிறுவனங்களால் வழங்கப்படும் சேவைகள்

# வர்த்தக கைத்தொழில் கழிவுகளும் அதன் முகாமைத்துவமும்
# Commercial and Industrial waste and its management

**தொடர்ச்சி……**




*முகாமைத்துவம் செய்யாத கழிவுகளும் அதன் சுற்றுச்சூழல் மற்றும் மனித ஆரோக்கிய பாதிப்பும்*

**நிலம் மாசடைதல் :** வர்த்தக விசேடமாக கைத்தொழில் செயற்பாடுகளால் அகற்றப்படுகின்ற ஆபத்தான மற்றும் நச்சுதன்மையான பெற்றோலியப்பொருட்கள், ஈயம் காரீயம் போன்ற பார உலோகங்கள் செறிந்த பொருட்கள் , கிருமிநாசினி, பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் போன்றவற்றை எரித்தல் நிலமேற்பரப்பில் கொட்டுதல் அல்லது புதைத்தலினால் நிலம் தன் கனிமமான வளத்தினை இழக்கின்றது. இது மட்டுமல்லாது நிலத்தின் வாழுகின்ற சூழலுக்கு நன்மைதரக்கூடிய உயிரிகளும் அழிவடைகின்றன இந்நிலை நிச்சயமாக சூழல் சமனிலையை குழப்பும் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை.

**மனித ஆரோக்கியத்துக்கு பாதிப்பு :** கழிவுகளால் பல வழிகளில் மனிதனுடைய ஆரோக்கியத்திற்கு தீங்கு காணப்படுகின்றது. அகற்றப்படுகின்ற இராசாயனங்கள் மற்றும் உலோகங்கள் நிலம் மற்றும் நீரினூடே மனிதனுடைய உணவுச்சங்கிலியில் கலந்து புற்றுநோய் மற்றும் தோல்வியாதிகளை ஏற்படுத்துகின்றது. மாசடைந்த வளி சுவாச நோய்களுக்கு மற்றும் அசௌகரியங்களுக்கும் வித்திடுகின்றன. இதற்கு சிறந்த உதாரணமாக உலகிலேயே மாசுபட்ட நகரங்களில் முதன்மை நகரமாக இந்தியாவின் புது டெல்லி பெயரிடப்பட்டுள்ளது இங்கு சுவாசிப்பதற்கு மக்கள் அசௌகரியப்படுகிறார்கள் ஆகவே இந்நிலமையை சரிசெய்ய சுவாசிக்கும் சிலிண்டர்களை அந்நாடு பொருத்தி வருகிறது. ஆகவே இலவசமாய் கிடைக்கின்ற வளத்தை முறையான வள முகாமைத்துவம் மற்றும் அது பற்றிய விழிப்புணர்வு இல்லாமையால் இழக்கின்றோம் என்பது கவலைக்குரியது.





DELHI POLLUTION DEATHS UP BY 100% SINCE 1991

தொடரும்……

# பங்குச் சந்தையும் முதலீடும்

**பங்குச் சந்தை தொடர்கிறது ......**

பங்குச்சந்தை முதலீட்டில் பலவகையான உத்திகள் உள்ளன அவற்றில் சில இதோ கீழே

1. வெலியு இன்வஸ்மன்ட் (Value investment)

2. குரொத் இன்வஸ்மன்ட் (Growth investment)

3. காண்ரா இன்வஸ்மன்ட (Contra investment)

4. பஸிவ் இன்வஸ்மன்ட் (passive investment)

இதை தவிர வேறு சில உத்திகளும் உள்ளன ஆனால் அவற்றை எல்லாம் இவற்றினுள் அடக்க முடியும். ஒருவரின் மனநிலைக்கேற்ப அவரின் யுத்திமுறையும் அமைய வேண்டும். வேகமான நிலையில் இருப்பவர்கள் குரோத் (Growth) பங்குகளை நாடிச்செல்வர். தாம் வாங்கும் பங்கில் வெலியு (Value) இருக்கவேண்டும் என்பவர்கள் வெலியு உள்ள பங்குகளை நாடிச்செல்வர். மாத்தி யோசிப்பவர்கள் காண்ரா பங்குகளை நாடிச்செல்வர். மார்கட் ரிஸ்கை ஒரு துளி கூடவோ குறையவோ எனக்கு வேண்டாம் என்று நினைப்பவர்கள் பஸிவ் முறையைச் நாடுவர்.

வெலியு இன்வஸ்மன்ட் (Value investment)

சீசனில் ஒரு கிலோ தக்காளி 300 ரூபாய்க்கு விற்பனையாகின்றது. நீங்கள் தக்காளியை பயிர் செய்தால் அதன் அடக்கவிலை ஒரு கிலோவிற்கு 700 ரூபா ஆகும். ஆக உற்பத்தி விலையை விட கிலோவிற்கு 400 ரூபாய் குறைவாக கிடைக்கின்றது. ஓர் ஆண்டுக்கு உங்களுக்கு 5 கிலோ சாஸ் (sauce); தேவை இதைத் தயாரிக்க 20 கிலோ தக்காளி தேவைப்படுகிறது. இப்போது நீங்கள் கணக்கு போடுகிறீர்கள்- விலை குறைவாக இருக்கும் நேரத்தில் நான் ஏன் அந்த 20 கிலோ தக்காளியை வாங்ககூடாது. வெறும் 6000 ரூபாயில் எனக்கு 5 கிலோ சாஸிற்கு தேவையான தக்காளி கிடைத்துவிடுகிறதே இப்படி யோசிப்பதுதான் வெலியு இன்வஸ்மன்ட்.

50 இலட்சம் ரூபா முதலீட்டில் நீங்கள் ஒரு தொழில் தொடங்க நினைக்கின்றீர்கள் ஆனால் அதே தொழில் அதே சைஸ் அதே நீங்கள் எதிர்பார்க்கும் லாபத்தில் 35 இலட்சம் முதலீட்டிலேயே கிடைக்கின்றது என்றால் வாங்குவீர்களா இல்லையா? அதுதான் வெலியு இன்வஸ்மன்ட் (Value investment). பங்குகளும் சில சமயங்களில் குறைவான விலையில் கிடைக்கசெய்யும். ஆனால் இது மாதிரியான பங்குகளை எப்படி கண்டுபிடிப்பது வெலியு பங்குகளுக்கு பல அளவுகோள்கள் குறைவாக இருக்கும். பங்குலாபம் அதிகமாக இருக்கும். இந்த நிறுவனங்களின் வளர்ச்சியின் வேகம் அவ்வளவாக இருக்காது. ஆமைபோல் ஸ்லோவாக ஸ்ரெடியாக செல்லும். வேகமாக செல்ல விரும்பும் பல முதலீட்டாளர்களுக்கு இப்பங்குகள் பிடிக்காது. பங்குகளின் உள்ளார்ந்த மதிப்பை கவனிப்பது அவசியமாகும். நாம் மேலே கண்ட உதாரணத்தில் தக்காளியின் உள்ளார்ந்த மதிப்பு ஒரு கிலோவிற்கு 700 ரூபாய். நமக்கு சந்தைளில் கிடைத்ததோ கிலோவிற்கு 300. அதரவது அதன் உள்ளார்ந்த மதிப்பை விட 57 சதவீதம் குறைவாக கிடைத்திருக்கிறது

தொடரும்......





## ஒரு மருத்துவ குடும்பத்தின் வெற்றிக்கதை
## Success story of a doctor family

Siddha Ayurveda is a specific fundamental medical treatment making use of Indo-Sri Lanka medical traditions to facilitate healthy living of the citizens. Globally although the western medicine has monopolized the market Ayurveda treatment is still able to go hand in hand among thousands of citizens in South Asia which proves the recognition that the latter has got in the modern time.

"Mangalapathy Clinic"was started in Jaffna during 1973 and still continues amidst many challenges. It is functioning now in Wellawatte, Colombo as well as in Nallur, Jaffna. The medicines provided to the patients are mostly produced locally while some are obtained from Indian counterparts. The locally manufactured medicines are through generational experience. The treatments are wide spread to not only the ones in the country but also for those in India and many European countries.

The outreach is well over 2 million people according to an approximate estimate. The treatment facilitates not only a healthy living but also to maintain proper lifestyles. Siddha-Ayurveda medical treatment does not focus curing of diseases alone but concentrates on improving life styles as well.

There are already 5 academically qualified Ayurveda physicians within the "Mangalapathy" family including Dr.R.Lakshmana Iyer (DAM – Cey, D.Mg – Ind) who was quite kind enough to meet the team from CCIY with his son Dr.Pragatheswaran and Dr.R.Mangalambigai Ammal (DAM-Cey, M.Phill-Ind).

**Founder Dr. Mangalampikai**

**Dr. Laskasmana Iyer**



**Medical and healthy food products**

"We started our profession for medical consultation only at the beginning but over time the trend changed gradually so that the patients received a well-balanced information on healthy living habits along with medicine" said Dr. Laksmana Iyer about the growth of the organization. "We exhibited and conducted awareness programs so that more and more people could get the benefit of Siddha Ayurveda medicine. Our treatment is not necessary to be continued life ling but there will be a definite point of doing away with the medicine unlike in the other Western types. We treat for the root cause and not for the symptoms which is the key to the success of Siddha Ayurveda medicine. Nowadays there are more and more Westerners contacting us for consultations. We are exporting medicines to most of the European countries as well as USA, Canada and Australia" said proudly Dr. Lakshmana Iyer about the achievements of the organization. "Mangalapathy Healthy Foods has been registered as a company in 2018. This is a major achievement in the development of our organization and the steps that we have taken to fit in to the modern world and meet the requirements of the younger generation.



Dr. Laksmana iyer



Medicine production section





Medicine store section

We took part in an exhibition organized by Small Enterprises Development Division (SEDD) in Jaffna where our products received excellent support from the viewers which increased the demand of our products. This was followed by submission of a project proposal in 250 pages to the World Bank for the production of export oriented products. The gross value of the approved project was LKR 15 Mn and of which 60% was from the World Bank and the balance to be our own share. This is the very first such project from the Sidda-Ayurveda sector to get the recognition and approval both by the government and the World Bank.

**Continues…….**

We have established the production area for the project in a rehabilitated building in Nallur at a cost of LKR 5 Mn and the equipment have been ordered now for the production section. There are 8 women employed for the production unit" said Dr.Pragatheswaran quite enthusiastically about the new phenomenon of the Organization. "We are quite lucky to have joined CCIY at the correct time and got the ISO, HCCAP and BCI recognitions through their facilitation which enables us to be the true pioneers in the International trading" happily continued Dr.Pragatheswaran.

"There are quite many challenges in this trade at the present environment especially when we try to export medicines abroad due to the suspicion of underground 'drugs' handled by unscrupulous mafia in the area. The other difficulty is for the obtaining proper resource items for the manufacture of medicine. More important is the change over to the modern trend using machinery for the production..





## Colombo- Wellawatta-Clinic

We need to train the locals for at least 6 months in the operation of the machinery but we are not sure for how long the locals would continue to work with us since the 'diaspora' attraction is always there for the youths We faced a different challenge at the inception period when we went to advertise. There were many who looked down upon us for going public with such ads. The important complaint would be the negative approach of the government officers when we approach them for assistance. We tend to lose our dignity in front of them which discourages us from being in the sector" said Dr. Lakshmana Iyer about the many struggles they faced during the past many decades.

"With all these we are going forward with our own efforts and initiatives and continuous support of our valued customers who have shown undisturbed faith and confidence on us locally and globally" concluded Dr.Laksmana Iyer about their success.

# Luxmy Food Products



- Dum Biryani
- Fried Rice
- Rice and Curry
- Paneer butter masala
- Doughnut
- Cake
- Sea food Pickle
- Ginger Pickle
- Maasi sambal
- Dry fish sambal
- Prawns sambal
- Carrot Oil





சிறிய வைபவங்கள் மற்றும் வீட்டு தேவைகளுக்கு
உங்கள் விருப்பத்திற்கேற்ப உணவுகளை
ஓடர் செய்து பெற்றுக்கொள்ளலாம்.

LFP

285, Katkulam Veethy, Urumpirai.

076 083 4481

# Board of Directors



**Vice Chairman**
**Mr.V. K. Vignesh**



**Director**
**Mr.T.Senthan**



**Director**
**Dr. N. Manikaran**



**Director**
**Mr.S. Thirumaran**




**Director**
**Mrs.Stalini Pirabu**



**Director**
**Mr.Stephan Lenard**



**Director**
**Mr. K. Vaseekaran**



**Director**
**Mr. Vasudevan Rasiah**

# Staff



**Lead Project Officer**
**Mr. Thomas Hirl**



**Admin Manager**
**Mrs. S Keerthiha**



**Project Manager**
**Mr. N Kohuladas**



**Project Officer**
**Mr. J. Recopayam**



**Office Assistant**
**Mr. R.Birunthan**

## புதன்கிழமை சந்தை-2022 (Wednesday Market-2022)

யாழ்ப்பாண பல்கலைக்கழக வணிக மற்றும் முகாமைத்துவ கற்கைகள் பீடம் ஒவ்வொரு புதன்கிழமைதோறும் புதன்கிழமை சந்தை-2022 (Wednesday market-2022) என்ற நிகழ்வின் மூலம் சிறிய நடுத்தர தொழில்முயற்சியாளர்களுக்கு தமது உணவு உற்பத்திள் மற்றும் கைவினைப்பொா்ட்களை சந்தைப்படுத்துவதற்கு வாய்ப்பினை வழங்குகின்றது வடமாகாணத்திலுள்ள சிறிய நடுத்தர தொழில்முயற்சியாளர்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களுக்கிணங்க காணப்படின் CCIY உடன் நேரடியாகவோ அல்லது தொலைபேசி மூலமோ தொடர்புகொண்டு இவ் வாய்ப்பினை பெற்றுக்கொள்ள முடியும்.

1. குறைந்க விலையில் வாங்ககூடிய வகையில் பல்வேறு வகையான உற்பத்திகளாக இருத்தல் கட்டாயமானது
2. வளர்ந்து வருகின்ற தொழில்முயற்சியாளனாக இருப்பின் விரும்பத்தக்கது

**சிறந்த உணவு உற்பத்தி நடைமுறைகளுக்கான சான்றிதழ்**

GOOD MANUFACTURING PRACTICES (GMP)

யாழ்ப்பாணம் வர்த்தக கைத்தொழில் மன்றமானது தொழிற்முயற்சியாளர்களின் நலன் கருதி மேற்குறித்த (GMP) சான்றிதழை பெற்றுக்கொள்வதற்கு குறித்த ஆளனிகொண்டு செயற்ப்படுகின்றது. எனவே இது தொடர்பான விடயங்களுக்கு CCIY யினை நேரடியாகவோ அல்லது தொலைபேசி மூலமோ தொடர்புகொண்டு இச் சேவையினைப் பெற்றுக்கொள்ள முடியும்